போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

III-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்

SUPPLEMENT TO PART III OF THE FORT ST. GEORGE GAZETTE,

SEPTEMBER 4, 1923.

ந. 10.] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1923 ம்௵ செப்டம்பர்௴ 4௳. [விலை, 3 பை.

இந்தியா கவர்ன்மென்ட் மசோதா ஆக்ட்.

BILL OF THE GOVERNMENT OF INDIA.

இராஜாங்க சபையிலும் சட்டநிரூபண சங்கத்திலும் கொண்டுவரப்பட்ட மசோதா ஆக்டுகளும், ஷை சபைக்கும் சங்கத்துக்கும் அனுப்பப்பட்ட ஸெலெக்ட் கம்மிட்டியாரின் ரிபோர்ட்டுகளும், இந்திய சட்டநிரூபண விதிகளைச் சேர்ந்த 18-வது விதியின்படி பிரசுரிக்கப்பட்ட மசோதா ஆக்டுகளும்.

இந்தியா கவர்ன்மென்ட்.

சட்டநிரூபண இலாகா.

அடியிற்கண்ட மசோத்ா ஆக்டானது - 1923-ம்௵ மார்ச்௴ 27௳ சட்டநிரூபண சங்கத்தில் கொண்டுவரப்பட்டது :—

No. 15 OF 1923.

1923-ம்௵த்து 15-ம் நெ.

A BILL FURTHER TO AMEND THE INDIAN LIMITATION ACT, 1908.

1908-ம்௵த்திய இந்துதேசத்துக் காலநிர்ணயச் சட்டத்தைப் பின்னும் திருத்துவதற்கான மசோதா ஆக்ட்.

1908-ம்௵த்து 9-வது ஆக்ட்.

1908-ம்௵த்திய இந்துதேசத்துக் காலநிர்ணயச் சட்டத்தைப் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, 192 -ம்௵த்திய இந்துதேசத்துக் காலநிர்ணய (திருத்துவதற்கான) சட்டமென்று சொல்லலாம்.

1908-ம்௵த்து 9-வது ஆக்ட்.

1908-ம்௵த்து 9-வது ஆக்ட் 19-வது பிரிவில் திருத்தம்.

2. (இதில் பின்னால் ஷை ஆக்ட் என்று குறிப்பிடப்படும்) 1908-ம்௵த்திய இந்துதேசத்துக் காலநிர்ணயச் சட்டத்தின் 19-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்கள் செய்யவேண்டும்; அவையாவன :—

(a) (1) குறிப்பிட்ட உட்பிரிவில், "ஒப்புக்கொள்வது" என்னும் வார்த்தைக்கு பர்த்தியாக "ஸ்பஷ்டமாகவும் எவ்வித திட்டமின்றியும் ஒப்புக்கொள்வது" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்; மேலும், "கையெழுத்து செய்யப்பட்டிருக்குமாகில்" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக "கையெழுத்து செய்து தேதி போடப்பட்டிருக்குமாகில்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்;

(b) (2) குறிப்பிட்ட உட்பிரிவை விட்டுவிடவேண்டும் ;

(c) 1-வது விவரணத்தை விட்டுவிடவேண்டும் ; மேலும்,

(d) 2-வது விவரணத்துக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும் ; அதாவது :—

“ விவரணம் 2.—இந்தப் பிரிவின் காரியங்களுக்காக “ கையெழுத்து செய்யப்பட்ட” என்பது - நேராகவாகிலும் இது விஷயத்தில் கிரமமாய் எழுத்துமூலமாக அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு எஜென்டினாலாகிலும் கையெழுத்து செய்யப்பட்ட என்று அர்த்தமாகும்.”

1908-ம் ஹூலத்து 9-வது ஆக்ட் 20-வது பிரிவில் திருத்தம்.

3. (a) ஷை ஆக்ட் 20-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக் கொள்ளவேண்டும் ; அதாவது :—

“ யாதொரு கடனுக்காகவாவது மரணசாஸனமூலமாய் ஏற்பாடான ஆஸ்திக்காகவாவது வட்டியாகவாகிலும் அசலின் பாகமாகவாகிலும் நிர்ணயமான காலஅளவுக்கு முன்னே பாக்கிதாரராலாயினும் இது விஷயத்தில் கிரமமாய் எழுத்துமூலமாக அதிகாரம் கொடுக்கப்பெற்ற அவருடைய எஜென்டினாலாயினும் யாதொரு தொகை செலுத்தப்பட்டு, அந்தப்படி செலுத்தினது சம்பந்தமான பதிவில் செலுத்தினவர் கையெழுத்து செய்து தேதி, போட்டிருந்தால், தொகை செலுத்தப்பட்ட தேதி முதற்கொண்டு புதிதாய் கெடுவு காலம் கணக்கிடப்படும்.”

(b) அதே பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவை விட்டுவிடவேண்டும்.

1908-ம் ஹூலத்து 9-வது ஆக்ட் 21-வது பிரிவில் திருத்தம்.

4. ஷை ஆக்ட் 21-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில், “ அதிகாரம் கொடுக்கப்பெற்ற”, “ அதிகாரம் பெற்ற” என்னும் வார்த்தைகளுக்கு முன்னே “ எழுத்துமூலமாக” என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

வழக்காடுவதையும் பொய் சத்தியம் செய்வதையும் சிருஷ்டீனை செய்வதையும் மோசம் பண்ணுவதையும் குறைப்பதே இப்பொழுது செய்ய உத்தேசித்திருக்கும் திருத்தங்களின் நோக்கமாகும். தற்காலம் அனேக சங்கதிகளை வாய்மொழியான சாக்ஷியத்தைக்கொண்டே ருஜு செய்யவேண்டியிருக்கிறது. அந்த சாக்ஷியத்தைக் கோர்ட்டார் நம்பினாலும் நம்பலாம் நம்பாமற் போனாலும் போகலாம். ஆகவே, இன்ன முடிவு ஏற்படுமென்று எப்போதும் நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை.

இப்போது செய்ய உத்தேசித்திருக்கும் திருத்தத்தின்படி, கெடுவு காலத்தை அதிகப்படுத்தவேண்டுமானால், உத்தரவாதியாயிருக்கும் நபராவது கிரமமாய் எழுத்துமூலமாக அதிகாரம கொடுக்கப்பெற்றிருக்கும் அவருடைய எஜென்டாவது ஸ்பஷ்டமாயும் எவ்வித திட்டமின்றியும் உத்தரிப்பதாய் ஒப்புக்கொள்வதாக எழுதி அதில் கிரமமாய்க் கையெழுத்திட்டு தேதிபோடவேண்டியவர்களாவார்கள். கெடுவுகாலத்தை அதிகப்படுத்துவதற்காக சந்தேகத்துக்கிடம் உண்டாகும்படியாகவோ தேதி போடாமலோ எழுதியிருப்பதை உபயோகித்து திடீரென்று பாக்கிதாரர்களுக்குக் கஷ்டம் விளைவிக்கக்கூடாது.

செலுத்தப்பட்ட தொகை வட்டிக்காகவே செலுத்தப்பட்டதா என்பது விஷயமாய் 20-வது பிரிவின்படி எப்போதும் விவாதம் ஏற்படுகிறது. திருத்தப்பட்ட பிரிவின்படிஅசலுக்காக எவ்வளவையாகிலும்செலுத்துவதும் வட்டி செலுத்துவதும் ஒரே மாதிரியாய்ச் செலாவணியாகும். 21-வது பிரிவிலும் அதே மாதிரி திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த மசோதா ஆக்டில் குறிப்பிட்டிருக்கும் பிரிவுகளில் எதன்படியாவது கெடுவுகாலத்தை அதிகப்படுத்த எஜென்டுக்கு அதிகாரம் கொடுத்திருந்தால் அது எப்போதும் எழுத்துமூலமாய் இருக்கவேண்டுமேயொழிய வாய்மொழியாய் இருக்கக்கூடாது.

இப்போது பிரேரேபித்திருக்கும் திருத்தங்கள் சட்டமாய்விட்டால், வழக்குகள் அனேகமாய்க் குறைவதுடன் பல சாக்ஷிகளை ஹாஜர் செய்விப்பது அவசியமாயிராதென்றும் நம்புகிறேன்.

1922-ம் ஹூ டிஸெம்பர்மீ 7உ. கிர்த்தாரிலால் அக்ர்வாலா, எம். எல். எ.

எச். மான்க்ரீப் ஸ்மித்,
இந்தியா கவர்ன்மென்ட் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS : PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.